**செய்தி வெளியீடு எண் : 515** **நாள் : 11.03.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (11.3.2023) கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டியில், தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அனைத்து விசைத்தறி சங்கங்களின் சார்பில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பாராட்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.**

தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அனைத்து கைத்தறி விசைத்தறி சங்கங்களின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

திரு. வி. செந்தில்பாலாஜி அவர்களே,

திரு. சு. முத்துசாமி அவர்களே,

திரு. ஆர். காந்தி அவர்களே,

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களே,

திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சண்முகசுந்தரம் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

நம்முடைய மதிப்பிற்குரிய திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களே,

அருமை சகோதரர் திரு.இ.ஆர். ஈஸ்வரன் அவர்களே,

அரசு உயர் அலுவலர்கள்

திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களே,

திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்களே,

மாவட்ட ஆட்சியர் திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப,

உள்ளிட்ட அரசு அதிகாரிகளே, அலுவலர்களே,

தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றியிருக்கக்கூடிய
திரு. டி.எஸ்.இ.எஸ்.சுப்பிரமணியன் அவர்களே,

நன்றி தெரிவிக்கக்கூடிய இந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு தலைமையேற்றியிருக்கக்கூடிய திரு. குமாரசாமி அவர்களே,

சங்கங்களின் நிர்வாகிகள்
திரு.எல்.கே.எம் சுரேஷ் அவர்களே,

திரு. வேலுசாமி அவர்களே,

திரு. வி.காரப்பன் அவர்களே,

திரு. ராமசாமி அவர்களே,

திரு. பாலசுப்ரமணியம் அவர்களே,

திரு. கந்தவேல் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளே,

என்னுடைய பேரன்பிற்குரிய நெசவாள சகோதரர்களே, சகோதரிகளே,

தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே, அன்பர்களே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களுடைய கூட்டமைப்பு சார்பில் உங்களுக்கு நன்றி அறிவிக்கக்கூடிய பாராட்டு விழா நடத்த இருக்கிறோம், அதற்கு நீங்கள் தேதி வழங்கிட வேண்டும் என்று இந்த மாவட்டத்தின் அமைச்சர், மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்கள் என்னிடத்தில் கேட்டபோது, எதற்கு நன்றி தெரிவிக்கிறார்கள் என்று நான் கேட்டேன். விசைத்தறிக்கு மின்கட்டண சலுகை வழங்கியதற்காக நன்றி தெரிவிக்க இருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். இதில் நன்றி தெரிவிக்க என்ன இருக்கிறது, நான் என் கடமையைத் தான் செய்திருக்கிறேன், கலைஞர் வழியில் செய்திருக்கிறேன் என்று அவரிடம் நான் சொன்னேன். கைத்தறியாக இருந்தாலும் விசைத்தறியாக இருந்தாலும் ஆடைகளை உற்பத்தி செய்கின்ற நெசவாள தோழர்களுக்கு உதவி செய்வதை நான் என்னுடைய கடமையாகத்தான் கருதுகிறேன். இன்றைக்கு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக்

கழகம் தோன்றிய காலம் முதல் நெசவாளர் துயர் துடைக்க எப்போதும் தயாராக இருக்கும் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்தக் காலகட்டத்திலேயே நெசவாளர்கள் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். கைத்தறி ஆடைகள் விற்காமல் தேங்கி இருந்தது. அவர்களுடைய துயர் துடைக்க, 1953–ஆம் ஆண்டு ஜனவரி 4–ஆம் நாள் கைத்தறி ஆதரவு நாள் என்று கொண்டாடியது திராவிட முன்னேற்றக் கழகம்.

கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக அவர்களிடம் துணியைப் பெற்று – தோளில் தூக்கிச் சென்று தெருத்தெருவாக விற்றுக் கொடுத்த இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். கைத்தறித் துணிகளை வாங்க வேண்டும், கைத்தறி துணிகளை அனைவரும் அணிய வேண்டும் என்பதை இயக்கமாகவே ஆக்கிய இயக்கம் தி.மு.கழகம்.

திருச்சி வீதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி ஆடைகளை சுமந்துகொண்டு விற்றுக் கொடுத்தார். தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை வீதிகளில் விற்பனை செய்தார். கலைஞர் அவர்கள் மட்டும் 20 ஆயிரம் ரூபாய்க்கு அன்றைக்கு விற்றுக் கொடுத்தார். ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. 1950–களில் ஒரு லட்சம் ரூபாய் என்பது எவ்வளவு பெரிய தொகை என்பது மூத்த தோழர்களுக்கெல்லாம் தெரியும். 10 கிராம் தங்கள் 99 ரூபாய் என்று இருந்த காலம் அது. செந்தமிழ் நாட்டு கைத்தறி நெசவு சேலைகள், வேட்டிகளை வாங்கவே நம் திராவிட நாட்டினர் ஷேமம் வேண்டி சிங்கார ஆடை வாங்குவீர் என்ற உடுமலை நாராயண கவியின் பாட்டை விற்றுக் கொடுத்தார். கழகத்தினர் அனைவரும் கைத்தறி துணிகள்தான் அணிய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. கழகத்தின் இருவண்ணக் கொடி போட்ட வேட்டிகளும் சேலைகளும் அதன்பிறகு அதிகமாகத் தயார் ஆனது.

தஞ்சையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணி வழங்க கழகம் முடிவெடுத்தது. தலைவர் கலைஞர் அவர்கள், கைத்தறி துணிகளை வாங்கித்தான் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு அன்றைக்கு வழங்கினார். ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகள் நடந்தது, பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு துணி விற்பனை

ஆனது, பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும் துணிகளை பெற்றுத் தந்தார்கள். அப்படி ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகள் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். இந்த வரலாற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் நம்முடைய அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள் என்னிடத்தில் தேதியை கேட்டபோது, என் கடமையைத்தான் செய்திருக்கிறேன் என்று நான் சொன்னேன்.

கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்பொழுதெல்லாம் நெசவாளத் தொழிலுக்கு உதவி செய்யப்பட்டது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

* காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சரிகை நிறுவனம் 1971ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

* ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலை 1973–இல் துவக்கப்பட்டது.

* கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975 முதல் செயல்படுத்தப்பட்டது.

* நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் முதன்முதலாக 1997 ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. மாதந்தோறும் ஓய்வூதியமாக 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. 26,433 நெசவாளர்கள் இதனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 20 விழுக்காடு தள்ளுபடி 1998 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

* உழவர்களுக்கு இருப்பதைப் போல கைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் 2006–ஆம் ஆண்டு கழக அரசால் கொண்டுவரப்பட்டது.

* நெசவாளர்கள் "ஹட்கோ" நிறுவனத்திடம் பெற்ற வீட்டுக் கடன் தொகை அனைத்தையும் 2008 ஆம் ஆண்டில் கழக அரசு தள்ளுபடி செய்தது.

இந்த வரிசையில்தான் இப்போது அமைந்துள்ள திராவிட மாடல் அரசானது பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கொரோனா காலக்கட்டத்தில் பல்வேறு தொழில்கள் நசிந்து போயின. அதற்கு நெசவுத் தொழிலும் விதிவிலக்கு அல்ல. அடுத்து, நூல் விலை உயர்ந்தது. இந்த

இரண்டு தாக்குதலில் நெசவாளர்கள் சிக்கியிருந்த நேரத்தில்தான் கழக அரசு ஆட்சிக்கு வந்தது. அவர்களுக்கு பல்வேறு திட்டங்களை தீட்டிக்கொடுத்து, இந்தத்

தொழிலில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம். நெசவாளர் யாரும் கோரிக்கை வைக்காமலேயே ஏராளமான திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறோம்.

* துணிநூல் துறைக்காகத் தனியாக ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளது.

* கடந்த 10 ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்த, காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா புத்துயிர் பெற்றுள்ளது.

* நெசவாளர் குறை தீர்க்கும் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

* நெசவாளர் முத்ரா திட்டத்தின்கீழ் 24 ஆயிரத்து 684 பயனாளிகளுக்கு 120 கோடியே 80 லட்சம் ரூபாய் முத்ரா கடன்கள் வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

* தஞ்சாவூர், கரூர், விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில், ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நெசவுக் கூடம், பொது வசதி மையம், சாயச்சாலைகள் திறந்து வைக்கப்பட்டது.

* 10 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று பணிபுரிந்து வந்த 406 தற்காலிக பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* முதன்முறையாக எப்போதும் இல்லாத வகையில், அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடும், அகவிலைப்படியில் 10 விழுக்காடும் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு இலட்சம் நெசவாளர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

* நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் 1033 நிரந்தரப் பணியாளர்களுக்கு 15 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

* சிறந்த நெசவாளர் விருதுகள், சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

* கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் 12 ஆயிரத்து 866 கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட ரூபாய் 60 கோடி செலவில் தறி உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

* 757 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பெறும் காசுக்கடன் மீதான வட்டிச்சுமையை குறைக்கும் வகையில் ரூபாய் 25 கோடி வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

* சென்னையில் முதன்முறையாக ரூபாய் 30 கோடி மதிப்பில் உலகத் தரத்தில் International Standard Design and Incubation Centre (DICC) அமைக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது.

* சென்னைக்கு அருகே மாமல்லபுரத்தில் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் காட்சியகம் (Handlooms and Handicrafts Museum) அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

* தமிழ்நாட்டின் கைத்தறி இரகங்களை அடுத்த தலைமுறையினருக்கு (Next Generation) கொண்டு செல்லும் வகையில் மின்னாக்கம் செய்து, ஆவணப்படுத்தும் பணிகள் ரூபாய் ஒரு கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

* ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையிலுள்ள தொழிலாளர்களுக்கு புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

* 5,000 விசைத்தறிகளின் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்த, ரூபாய் 12 கோடி செலவில் Electronic Panel Board நிறுவப்பட்டு வருகிறது.

* வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், 50 ஆயிரம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. 1 கோடியே 78 லட்சம் சேலைகளும், 1 கோடியே 77 லட்சம் வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் நடைபெற்று வருகிறது.

* வேட்டி சேலை திட்டம் மற்றும் சீருடை வழங்கும் திட்டங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 10

விழுக்காடு முதல் 30 விழுக்காடு வரை ரூபாய் 4 கோடியே 40 லட்சம் அளவிற்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், 42 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு சீருடைத் துணிகள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது.

* கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவைகளெல்லாம் வெறும் இருபதே மாத காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள்.

துணிநூல் துறை சார்பில் செய்யப்பட்ட திட்டங்கள் போதாது என்று மின்சாரத் துறை அமைச்சரும் தன் பங்குக்கு நெசவாளர்களுக்கு திட்டங்களை தீட்டி இருக்கிறார். எப்போதும் எதிலும் திட்டமிட்டு செயல்படக்கூடியவர் நம்முடைய அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள். நான் அவரை அடிக்கடி சொல்வேன், டார்கெட் அமைச்சர் என்று சொல்வேன். தனக்கான ஒரு டார்கெட்டை அவரே உருவாக்கி வைத்துக்கொண்டு அதை செய்து காட்டக்கூடிய ஆற்றல் நம்முடைய செந்தில்பாலாஜிக்கு உண்டு. அது கட்சிக்காக இருந்தாலும் சரி, ஆட்சிக்காக இருந்தாலும் சரி, அந்த இலக்கை அடைந்து காட்டுவார்.

ஒன்றரை லட்சம் இலவச மின் இணைப்புகளை வழங்கியதன் மூலமாக அரசுக்கு மிகப்பெரிய மதிப்பு விவசாய தொழிலாளர்களிடையே அது கிடைத்திருக்கிறது.

கடந்த பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை ஒரு கட்சி ஆண்டது. அந்த பத்தாண்டு காலத்தில் மொத்தமே 2 லட்சத்து 20 ஆயிரம் வேளாண் மின் இணைப்புகள்தான் வழங்கப்பட்டது. ஆனால், நாம் இருபதே மாத காலத்தில் 1 லட்சத்து 50 ஆயிரம் இணைப்புகளை வழங்கி இருக்கிறோம்.

இதைதான் அடிக்கடி நாங்கள் சொல்வது உண்டு,

"சொன்னதைச் செய்வோம்

செய்வதைச் சொல்வோம்!" – இது கலைஞரின் முழக்கம்!

"சொல்லாததையும் செய்வோம்

சொல்லாமலும் செய்வோம்!" – இது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய முழக்கம்.

அந்த வரிசையில்தான் சொல்லாமல் இத்தனை சாதனைகளை நாம் செய்து காட்டியிருக்கிறோம். அந்த வகையில் தான், கைத்தறிக்கும் விசைத்தறிக்கும் மின் கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கைத்தறி நெசவாளர்களுக்கு 100 அலகுகள் வரையிலும் விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 அலகுகள் வரையிலும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை 2006–ஆம் ஆண்டு தொடங்கியதே கழக அரசுதான். அதில் இப்போது மாபெரும் சலுகையை அரசு அறிவித்திருக்கிறது. விலையில்லா மின்சாரம். கைத்தறி நெசவாளர்களுக்கு 200 அலகுகள் என்பது 300 அலகுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 அலகுகள் என்பது 1000 அலகுகளாகவும் 3.03.2023 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 73 ஆயிரத்து 642 கைத்தறி நெசவாளர்களும், 1 லட்சத்து 68 ஆயிரம் விசைத்தறி நெசவாளர்களும் பயனடையப் போகிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 53 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ஆனால், இதை நாங்கள் செலவாக நினைக்கவில்லை. இந்தச் சலுகையை வழங்குவதன் மூலமாக, நெசவாளர்கள் புத்துயிர் பெறுவார்கள், அதிகமான உற்பத்திகள் செய்வார்கள். அந்த மகிழ்ச்சியைத்தான் உங்கள் முகங்களில் நான் பார்க்கிறேன்.

தமிழ்நாட்டில் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் 750 யூனிட்டிலிருந்து 1000 யூனிட்டாக உயர்த்தி வழங்கியதன் காரணமாக ஆறு தறிகள் மட்டும் வைத்து ஓட்டக்கூடிய ஏழை எளிய விசைத் தறியாளர்கள் எந்தவிதக்

கட்டணமும் இல்லாமல் இந்தத் தொழிலை செய்யக்கூடிய ஒரு அரிய நிலை இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

விசைத்தறிகளுக்கான மின் கட்டணத்தை 50 விழுக்காடு குறைத்து ஒரு யூனிட்டிற்கு 70 பைசா மட்டுமே எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு கணிசமான தொகை இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மிச்சம் ஆகும்.

மேலும், இந்தத் தொழிலை வளர்ச்சி அடைய வைப்பதற்கான பெரும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது. இந்தியாவில் உள்ள 24 லட்சத்து 6 ஆயிரம் விசைத்தறிகளில், நமது மாநிலத்தில் மட்டும் 5 லட்சத்து 63 ஆயிரம் விசைத்தறிகள் இருக்கிறது. இதில் 10 இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் அனைவரையும் காக்கும் கடமை அரசுக்கு உண்டு. திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு உண்டு.

உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்தேன்.

* வேளாண்மை, கைத்தறி போல விசைத்தறிகளுக்கும் அரசின் உதவிகள் வேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படி நினைப்பதால்தான் மின் கட்டணச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன்.

* விசைத்தறிகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் நூல் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக, உறுதியாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

* அரசின் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான துணிகளை விசைத்தறிகள் மூலமாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

* அரசின் சார்பில் அமைக்கப்படும் குழுக்களில் நெசவாளர்கள் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள்.

* ஒன்றிய அரசின் கைத்தறி உற்பத்தி ரக ஒதுக்கீட்டு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் வைத்திருக்கிறீர்கள்.

நீங்கள் வைத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கைகளெல்லாம் முறையாக பரிசீலிக்கப்பட்டு அவை படிப்படியாக ஆனால் அதே நேரத்தில் உறுதியோடு நிறைவேற்றப்படும் என்ற அந்த உறுதியை நான் இந்த மாநாட்டில் அறிவிக்க விரும்புகிறேன்.

இதுவரை சொன்னதையெல்லாம், நீங்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் பற்றி சொன்னேன். ஆனால் நீங்கள் வைக்காத கோரிக்கை ஒன்றையும் நான் இப்போது நிறைவேற்றப் போகிறேன். அது என்ன என்று கேட்டீர்களென்றால், அது என்னவென்றால், ஜவுளித்துறைக்கு ஆணிவேராக விளங்குவது நெசவுத்துறை. ஜவுளித்துறையில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்திடும் வகையில், மாநிலமெங்கும் பல இடங்களில் ஜவுளிப் பூங்காக்களை உருவாக்கிட இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில், மேற்கு மண்டலத்தில் அடுத்தாக ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நெசவுத்தொழிலுக்கு உரிய முக்கியத்துவத்தை வழங்கிடும் வகையில், தறித் தொழிற்சாலைகளுக்குத் தனி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவற்றிற்கான அனைத்து பொதுக்கட்டமைப்பு வசதிகளும் அளிக்கப்படும். இதன் மூலமாக ஜவுளிப் பணிகளை ஒரே இடத்தில் மேற்கொள்ள இயலும்!

இது எனது அரசு அல்ல, நமது அரசு, ஏன், உங்கள் அரசு. உங்களுக்காக உழைக்கத்தான் நான் முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறேனே தவிர – வேறல்ல. இது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதனுடைய அடையாளம்தான் நம்முடைய இளங்கோவன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னரே ஈரோடு கிழக்கு தொகுதியின் இடைத்தேர்தல், அதில் வெற்றி, சாதாரண வெற்றியா அது? திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு கிடைத்த மகத்தான வெற்றி, மக்கள் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். 66,000 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக இருந்த நம்முடைய ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார் என்று சொன்னால்,

கடந்த சட்டமன்றத் தேர்தலில் 10,000—க்கும் கீழ் வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற்றோம். இப்போது 66,000 வாக்குகள் வித்தியாசம், இது எதைக் காட்டுகிறது? இது மக்களுக்கு இந்த அரசின் மீது இருக்கக்கூடிய மகத்தான நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் மேற்கு மண்டலத்தில் நாம் எதிர்பார்த்த வெற்றியை நாம் பெற முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளும் அண்மையில் நடைபெற்று முடிந்த ஈரோடு கிழக்கு தொகுதியின் இடைத்தேர்தலிலும் நாம் அடைந்த வெற்றி.

மேற்கு மண்டலத்தில் நாங்கள் செல்வாக்கானவர்கள் என்று மார்தட்டிக் கொண்டிருந்த அதிமுக ஆட்சியானது கடந்த பத்தாண்டு காலத்தில் இந்த மண்டலத்திற்கு என்ன சாதனை செய்திருக்கிறது என்று கேட்டால், ஒன்றும் கிடையாது. தொழில் வளர்ச்சிக்காக எதுவும் செய்யவில்லை. புத்தாக்கத் தொழில்களை உருவாக்கவில்லை. ஆனால் நம்முடைய ஆட்சியில், கழக ஆட்சியில் ஏராளமான தொழில்களை கொண்டு வந்திருக்கிறது. பெரிய தொழில்கள் மட்டுமல்ல சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களையும் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். இத்தொழில்களின் மூலமாக ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு இளைஞர்கள் வேலை பெற்றிருப்பதோடு, பிற மாநிலங்களில் இருந்தும் தமிழ்நாட்டுக்கு வேலை தேடி வருகிறார்கள்.

இப்படி தமிழ்நாடு என்பது தொழில்வளர்ச்சியில் சிறந்த – அமைதியான – அனைவருக்கும் வாழ்வு தரும் மாநிலமாக இருப்பது சிலரது கண்களுக்கு பொறுக்கவில்லை.

நம்முடைய தலைவர் கலைஞர் கதை வசனம் எழுதிய புதையல் திரைப்படத்தில் நெசவுத் தொழிலை பாராட்டி ஒரு பாடல் வரும். அதனை எழுதியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள். அந்த பாடலை எழுதுவதற்காக ஒருமாத காலம் காஞ்சிபுரத்திற்குச் சென்று நெசவாளர் வீட்டில் தங்கி அந்தத் தொழிலை எப்படி செய்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு, அதற்குப் பிறகு பட்டுக்கோட்டை

கல்யாணசுந்தரம் அவர்கள் அந்தப் பாடலை எழுதினார் என்று சொல்வார்கள், இது வரலாறு. என்ன பாட்டு என்று கேட்டீர்களானால்,

சின்னச் சின்ன இடை பின்னிப்பின்னி வரும் சித்திரை கைத்தறி சேலையடி நம் தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி. இந்தப் பாடல் தான். சின்னச் சின்ன இடை பின்னிப்பின்னி வரும் சித்திரை கைத்தறி சேலையடி நம் தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி – அந்தப் பாட்டு தொடங்கும்.

"ஒற்றுமையோடு அத்தனை நூலும்

ஒழுங்கா வந்தா வளரும்

இதில் ஒரு நூலறுந்தால் குழறும்

இதை ஓட்டும் ஏழை கூட்டுறவாலே

உலகில் தொழில்வளம் உயரும்

இந்த உலகில் தொழில்வளம் உயரும்" என்று பட்டுக்கோட்டையார் எழுதியிருப்பார்.

அப்படி ஒற்றுமையாக மக்கள் அனைவரும் வாழக்கூடிய மாநிலம்தான் நம்முடைய தமிழ்நாடு. அதனைச் சிலர் சிதைக்கப் பார்க்கிறார்கள். வதந்திகள் மூலமாக – பொய்களை பரப்பி இந்த ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள், முயற்சிக்கிறார்கள். அத்தகைய வதந்திகள் – பொய்கள் அனைத்தும் எழுந்த வேகத்தில் அமுக்கப்பட்டு விடுகின்றன.

உழவர்களுக்கு – நெசவாளர்களுக்கு – இளைஞர்களுக்கு – மாணவர்களுக்கு – பெண்களுக்கு – விளிம்பு நிலை மக்களுக்கு – ஏழை எளிய மக்களுக்கு இந்த ஆட்சி தினந்தோறும் செய்து வரும் நலத் திட்ட உதவிகளில் இருந்து மக்களைத் திசை திருப்ப அவர்கள் செய்யக்கூடிய தந்திரங்கள் இதுபோன்ற பொய்களும் வதந்திகளும். நான் சொல்லுகிறேன், எனது பொது வாழ்க்கையில்

இதுபோன்ற எத்தனையோ பூச்சாண்டிகளைப் பார்த்தவன் நான். கலைஞருடைய மகன் நான். முத்துவேல் கருணாநிதி மகன் ஸ்டாலின் நான். எனவே, இந்த சலசலப்புக்கெல்லாம் இந்த ஸ்டாலின் அஞ்ச மாட்டான்.

போற்றுவார் போற்றட்டும் – புழுதி வாரி தூற்றுவார் தூற்றட்டும். தொடர்ந்து செல்வேன். மக்கள் சேவை ஆற்றுவேன். எனக்கு நீங்கள் அளிக்கக்கூடிய பாராட்டு என்பது இத்தோடு என் கடமை முடிந்துவிட்டது என்பதற்காக அளிக்கிற பாராட்டு அல்ல, இன்னும் பணி ஆற்று, இன்னும் தொடர்ந்து ஆற்று, இன்னும் எங்களுக்கு கடமையை நிறைவேற்றித் தா என்று சொல்வதற்காக நடைபெறக்கூடிய பாராட்டு விழாவாகத்தான் நான் கருதுகிறேன். எனவே, உங்கள் பாராட்டுகள் மேலும் எனக்கு உரம் அளிப்பதாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அனைத்து விசைத்தறி சங்கங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்து உங்கள் அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in